



# நகர் ஊரமைப்பு துறை (DTCP) திருப்பூர் மாவட்டம்
## தெக்கலூர் ஊராட்சி

திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், தெக்கலூர் ஊராட்சி மற்றும் கிராமம், க.ச.எண்: 399/4A -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லா பகுதி)

அளவு: 1 :40'0" (அ) 1:400
இணையவழி விண்ணப்ப எண்: CCO27O6V நாள்:-14-10-2025

குறிப்பு:-

மனைப்பிரிவின் பரப்பு : 2.34 $\frac{3}{4}$ ஏக்கர் (அ) 9504.00 ச.மீ (AS PER DOCUMENT)
ஒதுக்கிய மனைகள் : 46
மனைப்பிரிவு எல்லை ..........
நிலையில் உள்ள சாலை ..........

வ

பொது ஒதுக்கீடுகள் (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்வை):

மனைப்பிரிவு சாலை பரப்பு : 3127.87 ச.மீ
பூங்காவிற்கு தேவையான பரப்பு : மனைப்பிரிவின் பரப்பு-மனைப்பிரிவு சலைகளின் பரப்பு
= (9504.00 - 3127.87) X 10% = 637.61ச.மீ

அரசாணை எண்: 18 ந.நி (ம) கு.வ. துறை நாள்: 04.02.2019-ன் படி பூங்கா ஒதுக்கீடு 637.61ச.மீ பரப்பிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பு தொகை ரூ 1,15,022/- நாள்: 13.11.2025 -ல் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

A) பொது உபயேகம்-க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு :
மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சலைகளின் பரப்பு x 0.5 %
(9504.00-3127.87) X 0.5% = 31.88 ச.மீ
ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 33.16 ச.மீ (0.52%)

B) TANGEDCO -க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு :
மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சலைகளின் பரப்பு x 0.5 %
(9504.00-3127.87) X 0.5% = 31.88ச.மீ
ஒப்படைக்கப்பட்ட பரப்பு :92.63 ச.மீ (1.45%)

கட்டிட வரம்பு :- 9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீ விடப்படல் வேண்டும
9.0மீ க்கு மேல் 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ விடப்படல் வேண்டும்
மூலை முடக்கு:- 12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50x1.5மீ விடப்படல் வேண்டும்

நிபந்தனைகள்:

1. அரசாணை எண் .18 ந.நி(ம)கு.வ.துறை நாள்: 04.02.2019-ன் படி சாலைகள் மற்றும் பொது உபயோகம் உள்ளாட்சிக்கும் தானமாகவும், TANGEDCO-க்கான பரப்பு (அ) உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.
2. அரசாணை எண்:141 வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்:16.07.2022-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்க்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் தெக்கலூர் ஊராட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்ப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பரிவு நுழைவாயிலில் 0.6மீ x 1.2மீ அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவில் அரசாணை எண்:181 ந.நி(ம).கு.வ துறை நாள்:09.12.2020-ன் படி தார் சாலை, மழை நீர்வடிகால் வசதி, குடிநீர் வசதிகள் (ம) தெருவிளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கேற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

SWP / DTCP / TIRUPPUR / LAYOUT NO: 202 / 2025

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர் மாவட்டம்

Signature Not Verified
Signed by Assistant Director
Location:Tiruppur
Date:2025.11.18 13:23:41